O.S.No. 356/2003
02.12.2019

பி.வா.சா.3.திரு.தவசுந்தரபாண்டி த.பெ.சீமான் என்ற சுந்தரம்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு, என்ன வேலை செய்கிறேன் என்றால் விவசாயம். நான் பிறந்த தேதி என்னவென்றால் 30.05.1976. இந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல எனக்கு அழைப்பாணை வந்ததா அல்லது என்னை யார் அழைத்து வந்தார்கள் என்றால் வக்கீல் அழைத்து வந்தார். இந்த வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் குருசாமி செட்டியார் மற்றும் சேதுராமன் செட்டியாருக்கும் பாத்தியப்பட்டது. தாவா சொத்தை எத்தனை பகுதிகளாக மேற்கூறிய நபர்கள் பிரித்துக் கொண்டார்கள் என்றால் தாவா சொத்தை சேதுராமன் செட்டியாருக்கு ஒதுக்கப்பட்டது. மற்ற சொத்துக்கள் குருசாமி செட்டியார் மகன் கிருஷ்ணன் செட்டியாருக்கு ஒதுக்கப்பட்டது. எந்த வருடம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் தெரியாது. குருசாமியும், சேதுராமனும் என்ன உறவுமுறை என்றால் சகோதரர்கள். தாவா சொத்தின் புல.எண், பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. குருசாமிக்கு கொடுக்கப்பட்ட சொத்திற்கு, புல.எண், பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு வாதி கூட்டு உரிமையாளர் என்ற விவரம் தெரியுமா என்றால் சரியல்ல, சேதுராமன் தான் நடுவார். சேதுராமன் எந்த இடத்தில் நடுவார் என்றால் தாவா சொத்தில். தாவா சொத்து என்ன வகையான இடம் என்றால் நஞ்சை. தற்போது தாவா சொத்து எவ்வாறாக உள்ளது என்றால் காலியாக உள்ளது. குருசாமியும், சேதுராமனும் எந்த இடத்தில், எந்த தேதியில், யார் முன்னிலையில் வைத்து தாவா சொத்தை வாய்க்கரலாக பிரித்துக்கொண்டார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி தொழில் சம்பந்தமாக சில காலம் வெளியூரில் வசித்து வந்தார் என்றாலும், அவர் மேலூரில் தான் வசித்து வந்து வட்டி தொழில் செய்வதாக எனது நிருபண வாக்குமூலத்தில் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், நான் எனக்கு தெரிந்தததாக சொல்லும் விவரங்கள் அனைத்தும் நான் பிறப்பதற்கு முன்பே நடந்தவை என்பதால் அது பற்றி எனக்கு தெரியாது என்றாலும், 4ம் பிரதிவாதிக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.